[1992 மார்ச் 30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. என். ஜி. வேணுகோபால்.

திரு. என். ஜி. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்பிராந்தியத்திலே இருக்கிற தொழிலாளர்களுக்கு, ஊதியக் குழுவின் மூலம் குறைந்தபட்ச ஊதியத்தை நிர்ணயிக்கிற செயற்குறிப்பு இல்லையென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தமிழ்நாடு அரசு தற்போது ஆங்காங்கே ஊதியக்குழு சிபாரிசு செய்ததை அமல்படுத்தாத நிலையிலே இருக்கிற நிறுவனங்கள் மீது, நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் எந்தெந்த நிறுவனங்கள் குறைந்தபட்ச ஊதியக் குழுவின் சிபாரிசு அமல்படுத்தவில்லை என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், அவைகள் மீது உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் அ. ஸ்ரீதரன்.

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்கிறபோது தொழிலாளர்கள் நிறைந்த பகுதியில், தொழிற்சங்கப் பிரதிநிதிகளோடு, அந்தந்த சட்டமன்ற உறுப்பினர்களையும் அங்கம் வகிக்கிற வகையில் ஆவன செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினருடைய கருத்தை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 391. திரு. கே. சிங்காரம். மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்.

391—

மரவள்ளிக்கிழங்கிற்கு செஸ் வரி நீக்கல்.

*5162—திரு. கே. சிங்காரம்:
மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

தருமபுரி மாவட்டத்தில் மரவள்ளிக்கிழங்கிற்கு வசூலிக்கப் படுகின்ற பத்து சதவிகித செஸ் வரியை நீக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தர்மபுரி மாவட்டத்தில் மரவள்ளிக்கிழங்கு அறிக்கையிட்ட விளைபொருளாதலால் 1 சத விகிதம் விற்பனை கட்டணம் மட்டுமே வசூலிக்கப்படுகின்றது. இதை நீக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. முனிவெங்கடப்பன்.

திரு. கே. முனி வெங்கடப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் கிணறுகளில் நீர் இல்லாமல் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கும்போது, மற்ற எந்த விளைபொருட்களுக்கும் வரி விதிக்காத நிலையில் இந்தப் பொருளுக்கு மட்டும் விற்பனை வரி விதிக்கப்படுகிறது. இதை நீக்கினால் விவசாயிகள் பெரிதும் பயனடைவார்கள். ஆகவே. இனி வருங்காலத்திலாவது, இதை நீக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அங்கு விளையக்கூடிய பொருள்களை அறிக்கையிட்ட பொருளாக வேளாண் விற்பனைக் குழு அறிவிக்கிறது. அந்த மாவட்டத்திலே அறிக்கையிட்ட பொருளுக்குக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது, இந்தக் கட்டணம், 100 ரூபாய்க்கு ஒரு ரூபாய்தான் வசூலிக்கப் படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. பி. சந்திரசேகர், கேள்வி, தர்மபுரியைப் பற்றியது.

திரு. வி. பி. சந்திரசேகர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாய விளைபொருட்களுக்கு இப்படிப்பட்ட செஸ் வரியை விதிக்கிற காரணத்தினாலே. அதைப் பயன் படுத்தி வியாபாரிகள் விவசாயிகளின் விளைபொருட்களுக்குக் கொடுக்கிற விலையைக் குறைக்கிறார்கள். அதேபோல், மக்கள் வாங்குகிற அந்தப் பொருட்களின் விலையை ஏற்றி விற்கிறார்கள். மேலும், இப்படிப்பட்ட வரிகளை வசூலிக்கிறபோது முறை கேடுகள் நடக்கிற காரணத்தினாலே அரசாங்கத்திற்கு வருமானம் குறைகிறது. எனவே, இப்படிப்பட்ட விவசாயிகளினுடைய விளைபொருட்களுக்கு செஸ் வரி விதிக்கிற முறையை அரசு நீக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. முறைகேடுகள் எங்கு நடக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னிடத்திலே தனியாக எடுத்துச் சொல்வார்களேயானால். அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு, நா. சா. பழனிசாமி,

திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகின்ற பொழுது அறிக்கையிடப்பட்ட பொருள் களுக்கு 'செஸ்' வசூலிக்கப்படுகிறது என்று சொன்னார்கள். விவசாயப் பிரதிநிதிகள் அந்த வேளாண்மை அமைப்பிலே இல்லாத காரணத்தால் அதிகாரிகளே தங்களுடைய இஷ்டத்திற்கு சில அழுகும் பொருள்களைக் கூட, அறிக்கையிடப்பட்ட பட்டியலிலே சேர்த்து இருக்கிறார்கள். இந்த மரவள்ளிக்கிழங்கு, வெங்காயம், தேங்காய் போன்ற அழுகும் பொருள்களை அறிக்கையிடப்பட்ட பட்டியலிலே சேர்த்து இருக்கின்ற காரணத்தினால் அதிகாரிகள் லாரிகளை மடக்கிப் பிடித்து அவர்களிடம் அதற்கு செஸ் கேட்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. நா. சா. பழனிசாமி: எனவே, இப்படி அழுகும் பொருள்களைத் தடுத்து நிறுத்தும்போது, மற்ற பொருள்களை மார்க்கெட்டுக்குக் கொண்டுவருவதற்குக் காலதாமதம் ஆகி, அதனால் அந்த வியாபாரிகளுக்கும் விவசாயிகளுக்கும் நஷ்டம் ஏற்படுகிறது. எனவே, இந்த அழுகும் பொருள்களை அறிக்கையிடப்பட்ட பட்டியலிலிருந்து நீக்கிவிடுகின்ற குறிப்பு அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சில விளை பொருள்களை அறிக்கையிடப்பட்ட பட்டியலில் அரசு அறிவித்திருக்கிறது. இதிலே அழுகக்கூடிய பொருள்களையும் சேர்த்திருக்கிறார்கள். அப்படி அழுகக்கூடிய பொருள்கள் எது என்று அரசு பரிசீலித்து அதற்குத் தக்க நடவடிக்கையை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; வினா எண் 392 திரு. டி. எம். ரங்கராஜன், திரு. எம். கே. பாலன், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.